# லுனுகம்வெஹெர பிரதேச சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மே 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மே 10 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, லுனுகம்வெஹெர பிரதேச சபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான லுனுகம்வெஹெர பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 547,840 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 390,127 ஆகும்.

**(இ) நிதியத்தைக் குறைவாகப் பயன்படுத்தல்**

மீளாய்வாண்டில் 4 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 7,950,000 ஆகும். இந் நிதியேற்பாட்டில் ரூபா 305,051 ஆண்டின்போது செலவிடப்பட்டிருந்தது.

**2.5 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்

A/Y